அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது தொலைதூரத்தை ஆய்வில் எடுத்துக்கொண்டு செய்யவேண்டும் என்பதுதான். ஆகவே அங்கே நிரந்தரமான கடை வைக்கவேண்டும் என்றுதான் கேட்கிறேன். அதுதான் என்னுடைய கேள்வி. அங்கே நீங்கள் துவக்கிவிட்டீர்கள், மகிழ்ச்சி. ஆனால் அதேநேரத்தில் மரக்காவலசை கிராமத்திற்கும் காரங்குடி, கருமங்கடாவிற்கும், சேதுபாவாசத்திரத்திற்கும் 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. எனவே மரக்காவலசை கிராமத்தில் நிரந்தரமான கடை வைத்தால் நிச்சயமாக அந்தப் பகுதி மக்கள் பலன் பெற வாய்ப்பு இருக்கிறது. எனவே, கார்டுகளை மட்டும் கணக்கிடாமல் மக்களின் நடையையும் கணக்கில் கொண்டு அதாவது தொலை தூரத்தையும் கணக்கெடுத்து பரிசீலித்து அங்கே தயவு செய்து நிரந்தரமான கடை வைக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள சூழ்நிலையில் அந்தப் பகுதியிலே நியாவிலைக்கடை இருக்கக்கூடிய கிராமம் 3.5 கிலோமீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது. எனவே, அதைத் தனியாகப் பிரித்து அங்கே ஒரு நிரந்தரமான கடை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை. காரணம் அது வையபிள்-ஆக இருக்காது. தொடர்ந்து நட்டம்தான் ஏற்படும். இதையெல்லாம் மனதில் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களையும் திருப்திப்படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுடைய வேண்டுகோளுக்காக பகுதி நேரக்கடை ஒன்றை அங்கே திறப்பதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நவீன அரிசி ஆலை.

*5153—திரு கே. பிச்சாண்டி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை நகரில் நவீன அரிசி ஆலை அமைக்கும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் நெல் உற்பத்தியில் தமிழ்நாட்டில் 3-வது இடத்தை வகிக்கிறது. அதிக

1990 ஏப்ரல் 25]

அளவில் நெல் உற்பத்தி செய்யும் மாவட்டத்தின் தலைநகரான திருவண்ணாமலையில் நவீன அரிசி ஆலை அமைத்து நெல் அரவை செய்து மற்ற மாவட்டங்களுக்கு அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டில் 19 நவீன அரிசி ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 19-வது ஆலையை சமீபத்தில் தான் திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் போளூர் என்ற கிராமத்தில் திறந்து வைத்திருக்கிறோம். எனவே, மேலும் இன்னொரு நவீன அரிசி ஆலையை சம்புவராயர் மாவட்டத்தில் அமைகக வாய்ப்புககள் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் மக்களுக்கு அதிக அளவில் புழுங்கல் அரிசி தேவை என்பதை இங்கே பல நேரங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்படி அதிக அளவில் புழுங்கல் அரிசி தேவைப்படுகிற காரணத்தால் திருவண்ணாமலையில் அரசு கொள்முதல் செய்த லெவி நெல்லை அரிசியாக மாற்றி மற்ற மாவட்டங்களுக்குப் புழுங்கல் அரிசியை அனுப்புவதற்காக நவீன அரிசி ஆலை உடனடியாக அமைக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் அமைக்கப்பட இருக்கின்ற அல்லது வேண்டுகோள் விடப்பட்டிருக்கின்ற அந்த நவீன அரிசி ஆலையில்தான் புழுங்கல் அரிசி உற்பத்தி செய்யவேண்டும் என்ற அவசியமும் கட்டாயமும் இல்லை. தமிழ் நாட்டில் இருக்கின்ற எந்த நவீன அரிசி ஆலையிலும் புழுங்கல் அரிசி உற்பத்தி செய்யலாம். அந்த உற்பத்தி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. மற்றைய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகிற புழுங்கல் அரிசி திருவண்ணாமலைக்கும் அனுப்பப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

9-45 மணி

திரு. டி. ஆர். கஜபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எற்கெனவே ஒரு நவீன அரிசி ஆலை செய்யாறிலேயும், சமீபத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட ஒரு நவீன அரிசி ஆலை போளூரிலும், இரண்டுமே திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் உள்ளதால், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் அதிக வியாபாரிகள் இருக்கின்ற ஆற்காடு தொகுதியில் ஒரு நவீன அரிசி ஆலை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய காலம் வரும்போது கவனிக்கப்படும்.

திரு. ஏ. சி. தயாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சைக்கு அடுத்ததாக நெல் அதிகமாக உற்பத்தி யாகின்ற இடம் ஆரணி என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, தற்போது நவீன அரிசி ஆலை அமைக்கும் உத்தேசம் இல்லையென்றாலும்கூட எதிர்காலத்திலே அமைக்கும்போது ஆரணியில் அமைப்பது பற்றி பரிவுடன், கனிவுடன் கவனிப்பார் களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து, சரியான சாத்தியக்கூறுகள் இருந்தால் இந்த வேண்டு கோள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

லெவி முறையில் மாற்றம்.

* 7102—திரு பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உணவு தானிய வியாபாரத்தில் அரசு லெவி முறையில் மாற்றம் செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உணவு தானியங்களில் நெல்-அரிசியைப் பொறுத்த வரை லெவி முறையில் அரசு மாற்றம் செய்துள்ளது.

(ஆ) உள்ளூர் கொள்முதலை தீவிரப்படுத்தி அரசின் நெல்/ அரிசி கையிருப்பை கூட்டுவதற்காக நெல்/அரிசி மீதான வர்த்தகர் லெவியை 8–2–1990 முதல் 30 சதவீதத்திலிருந்து 50 சத வீதமாக அரசு அதிகப்படுத்தியுள்ளது.